ISSN - 2448 - 9883

# PROCEEDINGS

## International Conference on Contemporary Management (ICCM) - 2015

"Driving Productivity through Knowledge & Innovation"

Volume - II

Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka
11th & 12th, June 2015

ICCM-2015

# PROCEEDINGS

## 2nd International Conference on Contemporary Management

"Driving Productivity through Knowledge & Innovation"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
11th & 12th , June, 2015

## 2nd International Conference on Contemporary Management (ICCM)-2015

©Copy Right 2015 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

Published by: Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

URL : www.jfn.ac.lk/iccm

e-mail: : iccmuoj@gmail.com

T.P : 0094(0)212223610

Printers : Guru Printers Thirunelvely, Jaffna.

**ISSN:** : ISSN 2448-9883

**Disclaimer:**

Responsibilities for content of the full papers included in the publication remain with respective authors.

Proceeding of International Conference on Contemporary Management - 2015 (ICCM-2015), pp 13-22

# இலங்கைச் சாசனங்களில் சம்ஸ்கிருதமொழிச் செல்வாக்கு முன்னேஸ்வரம் தமிழ் சாசனத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

ச.பத்மநாபன்,

**ஆய்வுச் சுருக்கம்:**

சம்ஸ்கிருதமொழி தென்னாசியா முழுவதிலும் பரவியிருந்த ஓர் பண்பாட்டு மொழியாகும். இம் மொழியினது வளத்தின் செல்வாக்கு பிரதேச மொழிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இம்மரபில் இலங்கையின் பலசாசனங்கள் காணப்படுகின்றன. இச்சாசனங்களுள் சுமார் கி.பி 16ம் நூற்றாண்டு காலம் வரையாக இனங்காணப்படும் சாசனங்களுள் சம்ஸ்கிருத மொழியில் செல்வாக்கு மொழி, சொல்மரபு, யாப்பு,எழுத்து முதலான பல்வேறு நிலைகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இலங்கையின் சம்ஸ்கிருத சாசனங்கள் பற்றியும் இலங்கையின் ஏனைய சாசனங்களில் சம்ஸ்கிருத மொழியின் மொழியியல், இலக்கண, வரிவடிவம், சொன்மரபுத்தாக்கங்கள் எத்தகையது என ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. இலங்கை மன்னருள் 6ம் பராக்கிரமபாகு மன்னன் காலத்து சாசனமே முன்னேஸ்வரம் தமிழ்ச்சாசனமாகும். இச்சாசனத்தில் பல்லவ கிரந்தஷர வடிவில் சம்ஸ்கிருத மொழிச் சொற்கள் மொழியமைப்பிலும் செல்வாக்குப் பெறுகின்றது. இம்மொழிகளின் வரிவடிவம் எவ்வாறு இலங்கையில் தனக்குரிய செல்வாக்கினை ஏற்படுத்தியது என நோக்குவதே, இவ்வாய்வின் சுருக்கமாகும்.

**திறவுச் சொற்கள்** : சம்ஸ்கிருதமொழி, சாசனம், பல்லவகிரந்தாஷரம்

## அறிமுகம்:

இலங்கை வரலாற்றில் பெரும்பாலும் மன்னர்களின் கொடைகளுக்குரிய தொல்லியற் சான்றாதாரங்களாகச்சாசனங்கள் விளங்குகின்றன. இச்சாசனங்கள் சிலாசாசனங்கள்,தாமிரசாசனங்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. கி.பி 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக இறந்தகாலம் பற்றிய பார்வையில் சாசனங்களின் பதிவு முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வகையில் இலங்கையின் பரந்த பகுதிகளிலும் காணப்படும் சிலாசாசனங்கள் மிகுந்த முயற்சிகொண்டு ஆவணமாக்கப்பட்டுள்ளன. தொல்லியலாவணமாக இச்சானங்கள் கூறும் செய்திகள், மொழி முதலானவை முக்கிய செய்திகளாகவும் அமை கின்றன. இம்மரபில் இலங்கை மன்னர்கள் வரிசையில் 6ம் பராக்கிரமபாகு மன்னனின் சிலாசாசனமே முன்னேஸ்வரம் சிலாசாசனம் ஆகும். இச்சாசனத்தில் சம்ஸ்கிருத மொழியின் பல்லவ கிரந்தாஷர வடிவம் இடம்பெறுகின்றது. இவ்வரி வடிவமும், சம்ஸ்கிருத மொழிச் செல்வாக்கும் எத்தகைய பின்னணியில் ஏற்பட்டுள்ளதுஎன்பதனை விவரண ஆய்வுமுறையில் நோக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகின்றது.

## இலங்கையில் சம்ஸ்கிருதமொழி:

இலங்கையில் மொழிப்பண்பாட்டு மரபில் சம்ஸ்கிருத மொழி முக்கியத்துவம் பெறுகின்றது. தென்னாசியா முழுவதிலும் மொழியமைப்பைப் பொறுத்தவரையில் கி.பி. 4ம் நூற்றாண்டு வரையாக பிராகிருத மொழியமைப்பில் சம்ஸ்கிருத மொழி செல்வாக்குப் பெற்று தொடர்பாடல் மொழியாக விளங்கியது.[1] இலங்கையிலும் இந்தியாவிற்கு நிகராக சம்ஸ்கிருதமொழி இலக்கிய வளம் பெற்று விளங்கியது. இலங்கையில் புத்ததாசமன்னனின் கி.பி 398ம் ஆண்டைச் சார்ந்த 'சரார்த்த சங்கிரகம்' எனும் நூல் முதலாதாரமாக அமைகின்றது.[2] இதனைத் தொடர்ந்து சம்ஸ்கிருத இலக்கிய வளத்திற்கு மகுடம் வைத்தாற்போல் மன்னன் குமாரதாசரின் 'ஜானகீஹரணம்' (கி.பி 513 - 522) விளங்குகின்றது.[3]

விரிவுரையாளர்.சம்ஸ்கிருதத்துறை, கலைப்பீடம்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
padmanaban73@gmail.com